வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=




ஈழநாடு
Eelanadu
Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
06.08.2026 வியாழக்கிழமை
இதழ் : 212
பக்கங்கள் : 08

# மாகாண தேர்தலை விரைவில் நடத்த இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும்!

## தமிழ்க் கட்சிகளிடம் விக்ரம் மிஸ்ரி உறுதி




கொழும்பு, ஓக. 06

இந்தியப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை முழுமையாகச் செயல்படுத்தும் வகையில், மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்துமாறு இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் என இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடன் சுமார் ஒரு மணி நேரம்

07




# மூதூர் படுகொலை நடந்து 20 ஆண்டுகள்: உண்மை, நீதி,இழப்பீடு வழங்கவேண்டும்!

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, ஓக.06

கிழக்கு மாகாணம் மூதூரில் பிரெஞ்சு மனிதாபிமான அமைப்பான "ஆக்ஷன் அகெய்ன்ஸ்ட் ஹங்கர்" நிறுவனத்தின் 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி,

07

## செம்மணியில் நேற்றும் 8 என்புக்கூடுகள் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 06

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில்,

07

## குட்டிமணி, தங்கத்துரை சிலை நிறுவ விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீக்கம்!

யாழ்ப்பாணம், ஓக. 06

வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோருக்கு வல்வெட்டித்துறையில் சிலை அமைப்பதற்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் விதித்த தற்காலிகத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

சிலை அமைக்கும் நடவடிக்கையின் ஏற்பாட்டாளரும், முன்னாள் வல்வெட்டித்துறை நகர சபை உப தவிசாளருமான கந்தசாமி சதீஷூக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பிலேயே இந்த உத்தரவு

07

## நல்லூர் வடக்கு வாசல் வளைவு இன்று திறப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு வாசலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "நல்லூரான் வடக்கு வாசல் வளைவு" இன்று வியாழக்கிழமை ஆடிக் கார்த்திகை நன்னாளை

07

## உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கக் கோரிய மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஓக. 06

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு

07

# காணாமலாக்கப்பட்டோரின் மரபணு மாதிரிகளை செம்மணி எலும்புக்கூடுகளுடன் ஒப்பிடவேண்டும்!

## சபையில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 06

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மனித எலும்புக்கூடுகளின் தரவுகளுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மரபணு மாதிரிகளை ஒப்பிட்டு அறிவியல் ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய சட்டத் தேவைப்பாடு உள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஒப்புதலுடன் மரபணு மாதிரிகளைச் சேகரித்து, அவற்றை பன்னாட்டு மேற்பார்வையுடன் பாதுகாக்கும் நடவடிக்கைகள்

07

# போதைப்பொருள் ஒழிப்பில் இந்தியாவின் முழு ஒத்துழைப்பு கோரினார் ஜனாதிபதி!



## வெளியுறவுச் செயலருடன் நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஓக. 06

இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து இருதரப்பு உறவுகள், அபிவிருத்தி ஒத்துழைப்பு, போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பாக

07

## அகில விராஜ் காரியவசம் கைது! 18 ஆம் திகதி வரை விளக்கமறியல்



கொழும்பு, ஓக. 06

முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் விசாரணைக்காக

07

## இலங்கையின் முதல் பூச்சிய வெளியேற்ற சுற்றுலாத் தளமாக மாறவுள்ள நெடுந்தீவு!

யாழ்ப்பாணம், ஓக.06

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் தனித்துவமான இயற்கை, கலாசார மரபுகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு, நெடுந்தீவை இலங்கையின் முதலாவது பூச்சிய வெளியேற்ற சூழலியல் சுற்றுலா தளமாக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான விசேட கள ஆய்வு மற்றும் பங்குதாரர்களுடனான கலந்துரையாடல், சுற்றுலாத் துறை பிரதியமைச்சர் ருவன் ரணசிங்க

07

## கடந்த ஐந்து ஆண்டுகளில் 34,000 இற்கும் மேற்பட்டோர் முப்படையிலிருந்து விலகல்!

### பிரதி பாதுகாப்பு அமைச்சர் சபையில் தகவல்

கொழும்பு, ஓக. 06

கடந்த ஐந்து ஆண்டுகளில் 34,000 இற்கும் அதிகமானோர் இலங்கை முப்படைகளிலிருந்து விலகியுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2022ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரண்டு பொது மன்னிப்பு காலப் பகுதிகளைப் பயன்படுத்தி இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையைச் சேர்ந்த

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# மாகாண சபைத் தேர்தல் அரசியலமைப்பு உரிமை என ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி

## நிசாம் காரியப்பர் எம்பி. கூறுகிறார்

கொழும்பு, ஒக. 06.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது மக்களின் அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமை என்பதை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க எந்தத் தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் கூட்டணியான தமிழ் பேசும் மக்களின் அரசியல் பேரவை ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்து நடத்திய கலந்துரையாடல் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.



அந்த சந்திப்புகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகக் கூறிய அவர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்ட மக்களின் உரிமை என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாக தெரிவித்தார்.

அதேவேளை, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கும் உறுதிப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவர் மீண்டும் வலியுறுத்தியதாகவும் கூறினார்.

இந்த உறுதிப்பாடுகளை நடைமுறையில் நிறைவேற்றுவதே உண்மையான சவாலாக உள்ளதாகக் குறிப்பிட்ட நிசாம் காரியப்பர், அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த வாக்குறுதிகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை தங்களது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், அவற்றை நனவாக்கும் முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தார். (அ)

# சொகுசு பஸ்ஸுக்கு தீ வைப்பு: சாரதி, நடத்துநர் உயிர் தப்பினர்

கொழும்பு, ஒக. 06

கடுவலை பிரதான பஸ் நிலையத்தின் வாரச் சந்தை வளாகத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த சொகுசு பஸ்ஸொன்றுக்கு நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத இருவர் தீ வைத்து தப்பிச் சென்றுள்ளதாக கடுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலை வழியாக கடுவலை-மாத்தறை சேவையில் ஈடுபட்டிருந்த குறித்த சொகுசு பஸ் முழுமையாக எரிந்து நாசமானதுடன், அருகில் நிறுத்தப்பட்டிருந்த கடுவலை-கொழும்பு கொள்ளுப்பிட்டி வழித்தடத்தில் சேவையாற்றிய இரண்டு சாதாரண சேவை பஸ்களுக்கும் சிறியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணி முதல் 2.45 மணி வரையிலான நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பஸ்ஸுக்கு தீ வைப்பதை அருகில் இருந்த மற்றொரு பஸ்ஸில் தங்கியிருந்த சாரதியும் நடத்துநரும் கண்டு சத்தமிட்டதைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ வைக்கப்பட்ட நேரத்தில் சொகுசு பஸ்ஸின் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த சாரதியும் நடத்துநரும், அருகிலிருந்தவர்களின் எச்சரிக்கையால் உடனடியாக வெளியேறி உயிர் தப்பியதாக கூறப்படுகிறது.

இந்த தீவைப்பு தனிப்பட்ட விரோதம் அல்லது பழிக்குப் பழி காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு ஆரோக்கிய உணவுக் கண்காட்சி யாழில்!

யாழ்ப்பாணம், ஒக. 06

சுகாதார அமைச்சின் தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு "ஆரோக்கியமான சிற்றுண்டிகளை ஊக்குவிப்போம்" என்ற தொனிப்பொருளில் மாபெரும் உணவுக் கண்காட்சி நேற்று வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் சிறப்பாக நடைபெற்றது.

சுகாதார அமைச்சும் வேல்ட் விஷன் நிறுவனமும் இணைந்து ஆண்டுதோறும் நடத்திவரும் இந்தக் கண்காட்சி, ஆரோக்கியமான உணவு பழக்கங்களை மக்களிடையே ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், வரவேற்பு நடனம், உரைகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கண்காட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பரா. நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டார். மேலும், சுகாதார மற்றும் கல்வித் துறை அதிகாரிகள், பிரதேச சபை பிரதிநிதிகள், வேல்ட் விஷன் நிறுவன அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதில் பங்கேற்றனர்.


கண்காட்சியில் தானிய உணவுகள், கடல்சார் உணவுகள் உள்ளிட்ட பல்வேறு ஆரோக்கியமான உணவு வகைகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், தாய்மார் கழக உறுப்பினர்கள், சமூக அமைப்புகள், பொது சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு ஆரோக்கிய உணவுப் பழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றனர். (அ)



# வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மேம்பாடு; ஆளுநர்-பிரதியமைச்சர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக. 06

வடக்கு மாகாணத்தின் ஒருங்கிணைந்த சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவன் குணசேகரவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.



கூட்டத்தின் போது, கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரிமுனை சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் ஆளுநர் கவனம் செலுத்தியதுடன், அப்பகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறை அமைச்சின் ஒத்துழைப்பும் நிதி உதவியும் அவசியம் என வலியுறுத்தினார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்ய பல முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டினாலும், வனவளத் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறுவதில் ஏற்படும் தாமதங்கள் முதலீடுகளுக்கு தடையாக இருப்பதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, ஆளுநரின் கோரிக்கைகள் மற்றும் அவதானிப்புகளை கவனத்தில் கொண்ட பிரதியமைச்சர், வடக்கு மாகாண சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ரீதியிலான ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன், ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் தலைவர், ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# சிறுவனிடம் அதிக கட்டணம் வசூல்: பஸ் நடத்துநருக்கு ஒரு வாரத் தடை!

யாழ்ப்பாணம், ஒக. 5

வடமராட்சி கிழக்கில் 10 வயது சிறுவனிடம் முழுக் கட்டணம் அறவிட்ட தனியார் பஸ் நடத்துநருக்கு ஒரு வார கால பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

குடத்தனையிலிருந்து மருதங்கேணி நோக்கி பயணித்த 10 வயதுடைய சிறுவனிடம், வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கம் மற்றும் தேசிய வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கட்டண விதிமுறைகளை மீறி, வயது வந்தோருக்கான முழுக் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக சிறுவனின் தந்தை சங்கத்திடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து, வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கம் மேற்கொண்ட விசாரணையில், குறித்த நடத்துநர் சிறுவனிடம் முழுக் கட்டணம் அறவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தனியார் பஸ் நடத்துநருக்கு ஒரு வார காலத்துக்கு நடத்துநர் பணியில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

# பல இலட்சம் ரூபாபெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது!

மன்னார், ஒக. 06

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கிராமத்தில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சா பொதிகளுடன் ஒருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் மாலை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் வீடு ஒன்றில் மேற்கொண்ட சோதனையின் போது, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 9 கிலோ 400 கிராம் எடையுடைய கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன.

சோதனையின் போது வீட்டில் இருந்த சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட போதைப் பொருளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu

06.08.2026 வியாழக்கிழமை

பராபவ வருடம், ஆடி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## விக்ரம் மிஸ்ரியும் "அதையே" சொன்னார்

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட அரசாங்க தலைவர்கள், வெளியுறவு அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா உட்பட உயர்மட்ட அதிகாரிகள், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்று பல்வேறு தரப்பினரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

போன்று வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் மிஸ்ரி சந்தித்துப் பேசினார். இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய தலைவர்களும் இராஜதந்திரிகளும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்துப் பேசுவது வழமைதான் என்றாலும், இனப்பிரச்சினையின் பின்புலத்தில் அந்த சந்திப்புக்களுக்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் எப்போதும் இருந்து வருகிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் என்று மிஸ்ரி தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் கூறினார். இந்தியா அதன் நீண்டகாலக் கோரிக்கையை இலங்கையிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் என்பதே அவர் கூறிய செய்தியாகும்.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் இதனால் திருப்தியடைந்திருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

மிஸ்ரி ஏற்கெனவே 2008 - 2011 காலப் பகுதியில் கொழும்பில் பிரதி இந்திய உயர்ஸ்தானிகராகப் பணியாற்றியவர். இலங்கை இனப் பிரச்சினையின் சிக்கல்களை அவர் நிச்சயம் நன்கு தெரிந்தவராக இருப்பார்.

கொழும்பு அரசாங்கங்களிடம் புதுடில்லி இனப் பிரச்சினை விடயத்தில் மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை தவிர வேறு எதையும் வலியுறுத்தப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இலங்கையை அதிகாரப் பகிர்வுக்கு உட்படுத்தும் ஒரேயொரு சட்டஏற்பாடு 13 வது திருத்தம் மாத்திரமே. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வலியுறுத்தல் (இப்போது அது உண்மையில் வலியுறுத்தலாக அன்றி மென்மையான வேண்டுகோளாக மாறிவிட்டது) மாத்திரமே இலங்கையில் அரசியல் ரீதியில் உள்நாட்டு சட்டக் கட்டமைப்பில் இந்தியா செல்வாக்கைச் செலுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரேயொரு கருவியாகும். அதை இழந்துவிட புதுடில்லி ஒருபோதும் விரும்பாது.


ஆனால், அது விடயத்தில் இலங்கைக்கு நெருக்குதலை கொடுப்பதற்கும் இந்தியா இன்று தயாராயில்லை.

மாகாணசபை மற்றும் 13 வது திருத்தம் தொடர்பில் இந்தியா இலங்கையிடம் அண்மையை தசாப்தங்களாக விடுத்துவரும் வேண்டுகோள் கிட்டத்தட்ட ஒரு அறிவுரை அல்லது ஆலோசனை என்ற பரிமாணத்திலேயே இருந்துவருகிறது.

இந்த அறிவுரை / ஆலோசனை வழங்கும் இராஜதந்திரத்தில் இருந்து நிபந்தனையுடன் கூடிய அணுகுமுறைக்கு மாறாதவரை, - அதாவது மாகாணசபை தேர்தல்களுக்கான குறிப்பிட்ட திகதியை நிர்ணயிப்பது போன்றவற்றுடன் தனது பொருளாதார உதவிகளையும் உட்கட்டமைப்பு திட்டங்களையும் நேரடியாக இணைக்காத வரை - தமிழ் கட்சிகளின் தலைவர்களுடனான உரையாடல்களும் உறுதிமொழிகளும் வெறும் ஆறுதலாக மாத்திரம் இருக்குமே தவிர, மாற்றத்துக்கான தூண்டுதலாக ஒருபோதும் அமையப் போவதில்லை.

ஆனால், இந்தியா இன்றைய புவிசார் அரசியல் சூழ்நிலையில் அதைச் செய்ய ஒருபோதும் முன்வராது என்பதே யதார்த்தமாகும்.

# பெரிதாக உருவெடுக்கும் எல் நினோ அச்சுறுத்தல்



உலக வானிலை அமைப்பின் (WMO) சமீபத்திய கணிப்புகளின்படி, ஏற்கனவே தொடங்கியுள்ள எல் நினோ (El Nino) சூழல், அடுத்த சில வாரங்களில் அதிவேகமாக வலுவடைந்து **2026** ஆம் ஆண்டின் இறுதி வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய கணிப்புகள் இலங்கையில் மிதமான ஆனால், தீவிரமடையும் பாதகமான தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பைக் காட்டுகின்றன. சில தரப்பினர் எல் நினோவின் தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட முயன்றாலும், மிக மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதே விவேகமான செயலாகும்.

முன்னெச்சரிக்கைகளைப் புறக்கணித்து, பேரழிவு தாக்கும் வரை காத்திருந்து செயல்படுவதில் இலங்கை பெயர் போனது. இப்போதெல்லாம் பொருளாதார மற்றும் காலநிலை கவலைகளை விட அரசியலுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இனிமேல் காலநிலைக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரமிது.

இலங்கைக்கான முக்கிய எல் நினோ ஆபத்துகளாக நீர் பற்றாக்குறை, வறட்சி, விவசாய உற்பத்தி குறைதல், உணவுப் பணவீக்கம், குறைந்த நீர்மின் உற்பத்தி, வெப்ப அலைகள் மற்றும் பொருளாதார இழப்புகள் ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஆபத்துகளை திறம்பட எதிர்கொள்வதற்கு முறையான திட்டமிடல் அவசியமாகும்.

நீர் பற்றாக்குறை, குறைந்த விவசாய உற்பத்தி மற்றும் அதிக சக்தி செலவுகள் ஆகியவை பணவீக்க அழுத்தத்தை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை மந்தமாக்கும். ஆசிய பொருளாதாரம் பொதுவாக எல் நினோ நிகழ்வுகளின் மறைமுகத் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய ஒன்றாகக் கருதப்படுகிறது.

தனது மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவரும் இலங்கைக்கு, இது மிகவும் தவறானதொரு தருணத்தில் வந்துள்ளது.

பல பெரிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் ஏற்கனவே வெகுவாகக் குறைந்துவிட்டது. இது விவசாயிகள் மற்றும் பலரின் நீர் இன்னல்களை அதிகரிப்பதுடன், நீர்மின் உற்பத்தி திறனையும் குறைத்துள்ளது. நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பைச் செலவழித்து, நீர்மின் உற்பத்தியில் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுசெய்ய அதிக எண்ணெய் எரிக்கப்பட வேண்டியிருக்கும்.

பயிரின அறிவியல் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே, எதிர்வரும் மாதங்களில் கடுமையான வறட்சி ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ளதுடன், விவசாயத் துறையில் இதன் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். மழைவீழ்ச்சி நிலைவரங்களுக்கு ஏற்ப விவசாயிகள் தங்களின் பயிரிடல் அட்டவணையை மாற்ற வேண்டியிருக்கலாம்.

சூழ்நிலையைச் சமாளிக்க விவசாய அதிகாரிகளால் வெளியிடப்படும் வழிகாட்டுதல்களை அவர்கள் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என்றும் பயிர் இழப்புகள் ஏற்படக்கூடும் என்றும் பேராசிரியர் மாரம்பே வலியுறுத்தியுள்ளார்.

சாத்தியமான பயிர் இழப்புகளைக் கருத்தில் கொண்டு, அரிசி மற்றும் பிற உணவுப் பொருட்களின் அவசரக் கையிருப்பை உருவாக்க வேண்டிய அவசியமான தேவை உள்ளது. சாத்தியமான குறைந்த உற்பத்திச் சூழலைப் பயன்படுத்தி நேர்மையில்லாத தனியார் நெல் ஆலை உரிமையாளர்களும் வியாபாரிகளும் விலையை செயற்கையாக உயர்த்தக் கூடும் என்பதால், தற்போதைய அறுவடைக் காலத்தில் அரசாங்கம் நெல் கொள்முதலை அதிகரிக்க வேண்டும்.

பியர் (Beer) மற்றும் விலங்கு தீவனம் தயாரிப்பதற்கு நெல் மற்றும் அரிசியைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு தீவிரமாக பரிசீலிக்க வேண்டும்.

மானிய விலையிலான உரங்களைப் பயன்படுத்தி பயிரிடப்படும் அரிசி போன்ற அதிக நீர் தேவைப்படும் பயிர், பியர் அல்லது விலங்கு தீவனம் தயாரிக்கப் பயன்படுத்தப்படக் கூடாது. வழக்கமான விவசாய முறைகள் காரணமாக, ஒரு கிலோகிராம் அரிசியை உற்பத்தி செய்ய சுமார் **1,500** முதல் **3,000** லீற்றர் நீர் தேவைப்படுவதாக சில நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், இலங்கை எல் நினோ நிகழ்வுகளுக்கு உடனடியாக பதிலளிப்பதற்கு அப்பால் சென்று, நீர் பாதுகாப்பை ஒரு தேசிய மூலோபாய முன்னுரிமையாகக் கருத வேண்டும். காலநிலைக்கேற்ற விவசாயம், நீர்ப்பாசன உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல், குறிப்பாக நகர்ப்புறங்களில் நீர் விநியோக முறைகளில் ஏற்படும் கசிவுகளைத் தடுத்தல், மழைநீர் சேகரிப்பை விரிவுபடுத்துதல், பண்டைய குளங்களின் அமைப்புகளைப் புனரமைத்தல், காடுகள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் பாதுகாத்தல் மற்றும் மழையை மட்டும் நம்பியிராத புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடுகளை அதிகரித்தல் ஆகியவற்றில் நாடு கவனம் செலுத்த வேண்டும் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எல் நினோ நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு நீர், உணவு மற்றும் சக்தி பாதுகாப்பிற்கான ஒரு ஒருங்கிணைந்த தேசிய செயல் திட்டத்தை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது, ஆனால் உடனடி தற்காலிக நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால கட்டமைப்பு சீர்திருத்தங்கள் ஆகிய இரண்டிலும் நாட்டின் கவனம் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இதுவே எல் நினோ சூழலை எதிர்கொள்ளவும் காலநிலையைத் தாங்கும் திறனைப் பெறவும் வழிவகுக்கும்.

**(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்சனை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.


**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்னோன்யம் பிறக்கும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# வடக்கு சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வு: பணிகளை துரிதப்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தல்



யாழ்ப்பாணம், ஓக. 06

வடக்கு மாகாண சுகாதாரம், சுதேச மருத்துவம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் மாதாந்தக் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்று முன் தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாகாண சுகாதார சேவைகள், சுதேச மருத்துவம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களங்களின் அபிவிருத்தித் திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாடு, கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம், மனித வள முகாமைத்துவம் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் ரூ.2,117 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 306 அபிவிருத்தித் திட்டங்களும், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழ் ரூ.290.5 மில்லியன் ஒதுக்கீட்டில் 78 திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் ரூ.310 மில்லியன் நிதியில் 36 அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது, அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் காலக்கெடுவுக்குள் நிறைவு செய்து, ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகவும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை உடனடியாக நீக்கி, திணைக்களங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தையும் செயல்திறனையும் மேம்படுத்த முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# மூதூர் படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 06

திருகோணமலை மாவட்டம் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்களின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில், உயிரிழந்த 17 பேரின் நினைவாக சுடர்கள் ஏற்றப்பட்டதுடன், மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவர்களின் மனிதாபிமான சேவையையும் உயிரிழப்பையும் நினைவுகூரும் வகையில் மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

**புளியங்குளம் பஸ் விபத்து:**

# சாரதி 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்தியமை உறுதியானது

வவுனியா, ஓக. 5

வவுனியா புளியங்குளம் பகுதியில் கடந்த ஜூலை 31ஆம் திகதி இடம்பெற்ற பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்து தொடர்பாக, பஸ் சாரதி 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பஸ் உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்த நிலையில், விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்டு போதைப்பொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதன் முடிவில் அவர் 'ஐஸ்' போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தது உறுதி செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்புக்கொடவின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், சாரதியின் ஓட்டுநர் அனுமதிப்பத்திரமும் காலாவதியாகியிருந்தமை கண்டறியப்பட்டது.

காலாவதியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் கொண்ட ஒருவரை பஸ் செலுத்த அனுமதித்த குற்றச்சாட்டில், சம்பந்தப்பட்ட தனியார் பேருந்து சேவையின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட உரிமையாளரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மலையக ஆலயத்துக்கு ரூ.2 இலட்சம் பெறுமதியான சிவலிங்கத்தை வழங்கியது சந்நிதியான் ஆச்சிரமம்!



நுவரெலியா, ஓக. 06

நுவரெலியா மாவட்டம் மஸ்கெலியா, பிரவுன்லோ தோட்டப் பகுதியில் அமைந்துள்ள சிறீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு ரூ.2 இலட்சம் பெறுமதியான கருங்கல் சிவலிங்கம் மற்றும் நந்தி பீடம் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இரண்டு அடி உயரமுடைய கருங்கல் சிவலிங்கம், அதற்கான பீடம் மற்றும் நந்தி பீடம் ஆகியவை ஆலய நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன் தினம் மாலை 6.00 மணியளவில் சிறீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது. இதில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரில் கலந்து கொண்டு அன்பளிப்பை வழங்கினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மக்களுக்கு விரைவான நீதி கிடைக்க நீதித்துறைக் கட்டமைப்பில் மாற்றம்!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 06

மக்களுக்கு விரைவாக நீதி கிடைக்கும் வகையில் நீதிமன்றக் கட்டமைப்பை உருவாக்குவதே அரசின் நோக்கம் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக நீதித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்னிட்டு, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் திட்டங்கள் மற்றும் புதிய முன்மொழிவுகள் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. இதில் 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு முன்னேற்றம், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொ



ழிவுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, கொழும்பு மேல் நீதிமன்ற வளாகம், நீதி அமைச்சுக் கட்டடம், புதுக்கடை நீதிமன்ற வளாகம் மற்றும் காலி, மாத்தளை, கந்தளாய் உள்ளிட்ட பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நீதிமன்ற வளாகங்களின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. மேலும், 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்ட நீதிபதிகளுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலத் திட்டத்தை மீள ஆரம்பிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

சட்ட மாஅதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம் மற்றும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் செயற்பாடுகளும் மீளாய்வு செய்யப்பட்டன. அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கான புதிய ஆய்வுகூட உபகரணங்கள் ஒகஸ்ட் மாதத்திற்குள் கிடைக்கப்பெறவுள்ளதாகவும், மாதாந்திர பகுப்பாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கையை 9,000 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலைகள் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட 5,627 மில்லியன் ரூபா மூலதன நிதியின் கீழ் கட்டடப் புனரமைப்பு, நவீன தொழில்நுட்ப வசதிகள், வாகனங்கள் மற்றும் மென்பொருள் கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றமும் ஆய்வு செய்யப்பட்டது. அதேவேளை, பல்வேறு நிறுவனங்களின் கீழ் செயல்படும் புனர்வாழ்வு திட்டங்களை ஒரே நிறுவனத்தின் கீழ் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்டன. (அ)

# சிறைச்சாலை நெருக்கடிக்கு தீர்வாக இனி வீட்டுக்காவல்!

## புதிய சட்ட மூலத்தைத் தயாரிக்கும் பணிகளை விரைவுபடுத்த அனுமதி

கொழும்பு, ஒக. 06

சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலைக் குறைக்கும் மாற்று நடவடிக்கையாக, பொருத்தமான வழக்குகளில் சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகளை வீட்டுக் காவலில் வைக்கும் சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலத்தை விரைவாகத் தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்புக் காவல் அல்லது சிறைத்தண்டனைக்கு மாற்று வழிமுறையாக, பொருத்தமான வழக்குகளில் சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகளை வீட்டுக் காவலில் வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதற்கு முன்னதாக அமைச்சரவை கொள்கை ரீதியான அனுமதி வழங்கியிருந்தது. அதன்படி, சட்டவரைஞர் திணைக்களம் சம்பந்தப்பட்ட சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது-என்றார்.

இந்த சட்டமூலத்தை மேலும் மீளாய்வு செய்வதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் முன்வைத்த யோசனைகளுக்கு 2025 ஜூன் 23ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சட்டமூலத்தில் மேலும் சேர்க்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதால், அவற்றை உட்சேர்த்து சட்டமூலத்தை விரைவாக இறுதிப்படுத்துமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கான நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரின் யோசனைக்கும் அமைச்சரவை தற்போது அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# அரச அதிகாரிகள் சம்பள, ஓய்வூதிய ஆணைக்குழுவின் பணிகள் ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 06

அரச அதிகாரிகளின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ பணிகள், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தலைமையில் நேற்று முன் தினம் கொழும்பில் அமைந்துள்ள ஆணைக்குழு அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அரச அதிகாரிகளின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல், அரசு ஊழியர்களின் தொழில் முறைத் திறனை மேம்படுத்துதல், புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப அரச சேவை எவ்வாறு கட்டமைப்பு ரீதியாக சீரமைக்கப்பட வேண்டும் என்பது குறித்த பரிந்துரைகளை வழங்குதல் ஆகிய பொறுப்புகள் இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டு மாத காலத்திற்கு அனைத்துத் தொழிற்சங்கங்கள், அமைப்புகள் மற்றும் பொது மக்கள் தங்களின் பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கான யோசனைகளை அரச அதிகாரிகளின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் ருவன் சேனாரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# ஜூலையில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் 1.7 வீத வீழ்ச்சிநிலை!

கொழும்பு, ஒக. 06

2026 ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 1.7 சதவீத சிறியளவிலான வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூலை மாதத்தில் மொத்தம் 196,845 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இருப்பினும், அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளதுடன், அவர்களின் எண்ணிக்கை 44,547 ஆகவும், அது மொத்த வருகையில் 26 சதவீதம் ஆகவும் பதிவாகியுள்ளது.

அதேவேளை, ஐக்கிய இராச்சியத்திலிருந்து 21,834 பேரும், நெதர்லாந்திலிருந்து 12,493 பேரும், சீனாவிலிருந்து 12,336 பேரும், பிரான்ஸிலிருந்து 10,102 பேரும் ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதனிடையே, 2026 ஜனவரி 1 முதல் ஜூலை 31 வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த மொத்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,343,418 ஆகப் பதிவாகியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள்: விசேட சுற்றிவளைப்பில் 36 பேர் கைது!

## படகுகள், வாகனம், கடல் அட்டைகள் பறிமுதல்

கொழும்பு, ஒக. 06

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், கிழக்கு, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளைகளுக்குட்பட்ட கடற்பரப்புகள் மற்றும் கரையோரப் பகுதிகளில் இந்த விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜூலை 16 ஆம் திகதி நிலாவெளி-சலப்பையாறு கடலோரப் பகுதியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, மீன்பிடி விதிமுறைகளை மீறி இழுவை இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர். இதன்போது சட்டவிரோத நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஜூலை 17 முதல் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட தொடர் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் மேலும் 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 17 டிங்கி படகுகள், கெப் ரக வாகனம், சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சலப்பையாறு, துடுவை, புறாத்தீவு, சூடைக்குடா, அளம்பில், சிலாவத்தை, யாழ்ப்பாணம் கட்டைக்காடு, தலைமன்னார் வங்காளப்பாடு மற்றும் கற்பிட்டிக்கு அப்பால் உள்ள இப்பந்தீவு உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட படகுகள், வாகனம், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்டவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக குச்சவெளி, காட்பே, மூதூர், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் புத்தளம் பகுதிகளில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. (அ)

# சசீந்திர ராஜபக்ஷ மீதான வழக்கு செப்ரெம்பர் 28 இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக. 06

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ்ஷ மற்றும் மேலும் மூன்று பிரதிவாதிகள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை செப்ரெம்பர் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த சசீந்திர ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

இரு தரப்பினரின் சமர்ப்பிப்புகளையும் பரிசீலித்த நீதிபதி, வழக்கின் மேலதிக விசாரணையை செப்டம்பர் 28ஆம் திகதி நடத்துமாறு உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார். (அ)

# இரத்மலானையில் கைக்குண்டு தாக்குதல்!

கொழும்பு, ஒக. 06

கொழும்பு - இரத்மலானை சிறீ ஞானேந்திர வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது, அடையாளம் தெரியாத நபர்கள் இரண்டு கைக்குண்டுகளை வீசியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் ஒரு கைக்குண்டு வெடித்த நிலையில், மற்றொன்று வெடிக்காமல் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# தொடர் காற்று, கடும் மழையால் மூழ்கிய நிந்தவூர் வயல் நிலங்கள்!

## விவசாயிகள் பெரும் கவலை

அம்பாறை, ஒக. 06

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக வீசி வரும் பலத்த சூறாவளிக் காற்றுடன் கூடிய கனமழை காரணமாகப் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்நிலங்கள் நீரினுள் மூழ்கியுள்ளதாகப் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இயற்கை சீற்றத்தின் திடீர் மாற்றத்தால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக நிந்தவூர் விவசாயப் பிரிவுப் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.



பால் பிடிக்கும் பருவத்திலும், வளர்ந்த நிலையிலும் காணப்பட்ட நெற்பயிர்கள் பலத்த காற்றினால் தரைமட்டமாகச் சாய்ந்துள்ளதுடன் தொடர் மழையால் வயல்வெளிகளில் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. இதனால் பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதோடு, நீரில் மூழ்கிய நெல் மணிகள் முளைக்கத் தொடங்கியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வடிகால் வாய்க்கால்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகள் மற்றும் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக வயல்களிலிருந்து மழை நீர் வெளியேறுவதில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் விலை உயர்வு, உரம் மற்றும் விதை நெல் செலவுகளுக்கு மத்தியில் கடன் பட்டாவது சிறுபோக-பெரும்போகச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளுக்கு இந்நிலைமை பெரும் பொருளாதார பேரிடியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே பாதிப்புக்குள்ளான வயல்நிலங்களை விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் கமநல சேவை அலுவலர்களும் உடனடியாகப் பார்வையிட்டு, பயிர்ச்சேத மதிப்பீடுகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கமும் விவசாயக் காப்பீட்டுச் சபையும் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவே புதிய பேரவை

## இந்திய தூதுவரிடம் விளக்கம்

கொழும்பு, ஒக. 06

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 25 வீத தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும் நோக்கில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பேரவை உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் பேரவையின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடியபோது, பேரவையின் நோக்கங்கள் மற்றும் அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் நடைபெற்ற சந்திப்புகளின் பெறுபேறுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 25 சதவீத மக்களை இந்த அரசியல் பேரவை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அவர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் நலன்களை முன்னிறுத்தி ஒருங்கிணைந்த முறையில் செயற்படுவதே அதன் பிரதான நோக்கம் என்றும் இந்திய தூதுவரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், நீண்ட காலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவதற்காக பேரவை மேற்கொண்டு வரும் முயற்சிகள் தொடர்பிலும் இந்திய துதுவரின் கவனம் ஈர்க்கப்பட்டதாகவும், இந்த விடயத்தில் இந்தியாவின் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை பேரவை வெளியிட்டதாகவும் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் அரசியலமைப்பில் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் இந்தியாவின் வரலாற்றுப் பங்களிப்பு சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)



# கண்டி, நுவரெலியா நேற்று மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக. 06

சீரற்ற வானிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள அரச பாடசாலைகள் (ஹற்றன் கல்வி வலயப் பாடசாலைகள் தவிர) நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

கனமழை மற்றும் வானிலை காரணமான அனர்த்த அபாயங்களை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த இரண்டு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளை தற்காலிகமாக மூடுமாறு மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தது.

இதற்கிடையில், நிலவும் மோசமான வானிலையால் நாடளாவிய ரீதியில் ஒன்பது மாவட்டங்களில் 3,014 குடும்பங்களைச் சேர்ந்த 11,832 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், வானிலை தொடர்பான அனர்த்தங்களால் எட்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒரு வீடு முழுமையாகவும் 290 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் 3,538 பேர் தற்போது 51 தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# அம்பாறை சமுர்த்தி பணிப்பாளராக கரன்

அம்பாறை, ஒக. 06

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர சிரேஷ்ட அதிகாரி சுப்பிரமணியம் கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.



பொது நிர்வாக அமைச்சின் ஊடாக வழங்கப்பட்ட இந்த நியமனத்தின் அடிப்படையில், அவர் நேற்று முன் தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

இதுவரை அம்பாறை மாவட்ட பதில் சமுர்த்தி பணிப்பாளராகப் பணியாற்றிய மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் முன்னிலையில் பதவிப் பொறுப்பேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சுப்பிரமணியம் கரன், இதற்கு முன்னர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். (அ)

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் நேற்று திறப்பு

## மக்களுக்கு எச்சரிக்கை

நுவரெலியா, ஒக. 06

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழையால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் நேற்று அதிகாலை தன்னிச்சையாக திறந்துள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு நீர் வெளியேற்றும் கதவிலிருந்தும் வினாடிக்கு 30 கன மீற்றர் வீதம் நீர் கொத்மலை ஓயாவிற்கு வெளியேற்றப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை தொடர்ந்தால், எஞ்சியுள்ள வான் கதவுகளும் தன்னிச்சையாக திறக்கப்படும் சாத்தியம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால், நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள கொத்மலை ஓயாவின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் மூவர் கைது; ரூ.14,700 பணமும் பொலிஸாரால் பறிமுதல்

அம்பாறை, ஒக. 06

அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் போது, “ஐஸ்” போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டதுடன், போதைப்பொருள் விற்பனையால் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ரூ.14,700 ரொக்கப் பணமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை பிராந்திய ஊழல் ஒழிப்புப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், அம்பாகஹவெல்ல மற்றும் ஜெமுனுபுர பகுதிகளைச் சேர்ந்த இரு 21 வயது இளைஞர்களிடமிருந்து தலா 150 மில்லிகிராம் “ஐஸ்” போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மேலும், அவர்களுக்கு போதைப்பொருளை விநியோகித்ததாகக் கூறப்படும் பொல்வக காலனியைச் சேர்ந்த 23 வயதுடைய பிரதான சந்தேகநபரிடமிருந்து 2,500 மில்லிகிராம் “ஐஸ்” போதைப்பொருளும், ரூ.14,700 ரொக்கப் பணமும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தனுஷ்க சதருவான், அனுசங்க வீரசிங்க மற்றும் இசுரு மிஹிரன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இங்கினியாகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாகாண தேர்தலை...

கலந்துரையாடிய அவர், தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகள் தொடர்பாகவும் விரிவாகக் கேட்டறிந்தார். மேலும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் தமிழ்த் தலைவர்களின் கருத்துகளைப் பெற்றுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த தமிழ்த் தலைவர்கள், தற்போதைய அரசாங்கத்திற்கோ அல்லது ஜனாதிபதிக்கோ மாகாண சபைத் தேர்தலை நடத்தும் அரசியல் விருப்பம் காணப்படவில்லை என தெரிவித்தனர். அதேவேளை, இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை "கைவிடப்பட்ட காணிகள்" எனக் குறிப்பிடுவது தவறான கருத்து என்றும், மக்கள் நீண்டகால இராணுவ ஆக்கிரமிப்பால் கட்டாய் இடம்பெயர்வுக்கு உள்ளானவர்களே என்றும் சுட்டிக்காட்டினர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழர் தாயகத்தில் மக்கள் குடியிராத நிலங்களை அரசு சுவீகரிக்க முயன்றதாகவும், அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் அந்த முயற்சி தடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அதேவேளை, எம்.ஏ. சுமந்திரன், மக்களின் காணிகளை அவர்களிடமே மீள ஒப்படைப்பது அரசின் கொள்கை என ஜனாதிபதி கூறினாலும், அதற்கு முரணாக அரசின் தரப்பிலிருந்து வேறுபட்ட நிலைப்பாடுகள் வெளியிடப்படுவதாக தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சாணக்கியன், ப. சத்தியலிங்கம், கவீந்திரன் கோடீஸ்வரன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவும் பங்கேற்றார். (அ)

## செம்மணியில் நேற்றும்...

அதன் 44ஆவது நாளான நேற்று மேலும் 8 மனித என்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த 8 என்புக்கூடுகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டதாக அகழ்வுப் பணிகளுடன் தொடர்புடைய தரப்புகள் தெரிவித்தன.

இதன்படி, செம்மணிப் மனிதப் புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களாக் இதுவரை 98 நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை மொத்தமாக 491 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 489 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள என்புக்கூடுகளை அகழ்ந்து எடுக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

## மூதூர் படுகொலை...

மூதூரில் அமைந்திருந்த "ஆக்ஷன் அகெய்ன்ஸ்ட் ஹங்கர்"அலுவலகத்தில் 17 இலங்கை பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 16 பேர் தமிழர்கள் என்றும் ஒருவர் முஸ்லிம் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசாங்கங்களின் தொடர்ச்சியான விசாரணைகள் மற்றும் உறுதிமொழிகள் இருந்தபோதிலும், இந்தக் கொலைகளுக்கு இதுவரை எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை எனவும், இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உண்மை மற்றும் நீதிக்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

"நீதிக்காக குடும்பங்கள் 20 ஆண்டுகள் காத்திருப்பது மிகவும் நீண்ட காலமாகும். தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் இரு தசாப்தங்களாக துயரத்தை சுமந்து வருகின்ற நிலையில், இலங்கை அதிகாரிகள் பொறுப்புக்கூறலை வழங்கத் தவறியுள்ளனர்" என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பாபுராம் பந்த் தெரிவித்துள்ளார்.

20ஆவது ஆண்டு நினைவு வெறும் துயர நினைவாக மட்டுமன்றி, சட்டத்திற்கு மேலாக எவரும் இல்லை என்பதையும், சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் தண்டனையின்றி விடப்படாது என்பதையும் நிரூபிக்கும் சந்தர்ப்பமாக அமைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளில் நீதவான் விசாரணை, மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மற்றும் விசாரணை ஆணைக்குழு போன்ற பல்வேறு உள்நாட்டு விசாரணைகள் இடம்பெற்ற போதிலும், குற்றவாளிகள் தொடர்பில் எந்த வித பொறுப்புக்கூறலும் உறுதி செய்யப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

எனவே, சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் தரங்களுக்கு அமைவாக, கொலைகள் தொடர்பில் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற மற்றும் பயனுள்ள குற்றவியல் விசாரணை ஒன்றை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

## குட்டிமணி, தங்கத்துரை...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 22ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸாரினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகளின்போது, சிலை அமைப்பைத் தடுப்பதற்கான மேலதிக ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க பொலிஸார் 14 நாள்கள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

எனினும், சட்டத்தின் கீழ் 14 நாள்களுக்கு மேல் தற்காலிகத் தடை உத்தரவை நீடிக்க முடியாத நிலையில், பொலிஸாரினால் கோரப்பட்ட காலப்பகுதிக்குள் போதுமான ஆதாரங்கள் அல்லது ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் முன்னர் வழங்கியிருந்த தற்காலிகத் தடை உத்தரவை நேற்று நீக்கியுள்ளது. (அ)

## நல்லூர் வடக்கு வாசல்...

முன்னிட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு, முற்பகல் 10.30 மணிக்கு சட்டநாதர் சிவன் ஆலயத்திலிருந்து சமய அனுஷ்டானங்களுடன், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்தை ஏற்றிய இரட்டைத் திருக்கை காளை மாட்டு வண்டி மங்கள வாத்தியங்கள் முழங்க புறப்படவுள்ளது. சட்டநாதர் வீதியூடாக பயணிக்கும் இந்த ஊர்வலம் முடமாவடிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து புதிய வடக்கு வாசல் வளைவை நோக்கிச் செல்லும்.

இந்த விசேட நிகழ்வில், மாட்டு வண்டியில் எடுத்துச் செல்லப்படும் நெல் பெட்டகத்தில் பக்தர்கள் தங்களது நெல்லையும் சமர்ப்பிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

தொடர்ந்து, நண்பகல் 12.00 மணியளவில் தெய்வேந்திர முகூர்த்த நேரத்தில், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்துடன் வரும் காளை மாட்டு வண்டி முதன்முறையாக புதிய "நல்லூரான் வடக்கு வாசல் வளைவு" ஊடாகப் பிரவேசிக்கவுள்ளது. பின்னர் அந்த நெல் பெட்டகம் நல்லூர் கந்தசுவாமி திருவடிகளில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆடிக் கார்த்திகை நன்னாளில் நடைபெறும் இந்த மங்களகரமான நிகழ்வில் பக்தர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

## உயர்தரப் பரீட்சையை...

எடுத்துக்கொள்ளாமல் நிராகரிக்க உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் தடவையாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள ஐந்து மாணவர்களினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம்மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம், மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தேவையில்லை எனத் தீர்மானித்து அதனை நிராகரித்துள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## போதைப்பொருள்...

விரிவாக கலந்துரையாடினார்.

சந்திப்பின் போது, 2022-2023 பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய உதவி, டித்வா அனர்த்தத்தின்போது கிடைத்த மனிதாபிமான ஆதரவு, உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் மத்திய கிழக்கு போர்ச் சூழலுக்கு மத்தியில் இலங்கையின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கிய ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு ஜனாதிபதி இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார். இந்திய நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி வலியுறுத்தினார். சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும், காலநிலை மாற்றம் போன்ற பிராந்திய சவால்களை எதிர்கொள்வதற்கு அண்டை நாடுகள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பாராட்டியதுடன், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்தார். தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் இருதரப்பும் இணக்கம் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, பிரதி தூதுவர் மைத்ரே குல்கர்னி உள்ளிட்ட இந்திய பிரதிநிதிகளும், தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

## காணாமலாக்கப்பட்டோரின்...

முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் ஒகஸ்ட் 4ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், இதுவரை இடம்பெற்ற அகழ்வாய்வுகளில் மொத்தம் 483 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 481 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் எலும்புக்கூடுகளை நிலத்திலிருந்து அகழ்ந்தெடுப்பது முதற்கட்ட நடவடிக்கை எனக் குறிப்பிட்ட ரவிகரன், அதன் பின்னர் என்பு மாதிரிகளை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்தல் மற்றும் அவற்றின் கால எல்லையை கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தொடர்பான அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்லது கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை, தொல்லியல் ஆய்வுகளின் மூலம் கணிக்கப்பட்ட காலப்பகுதியுடன் ஒப்பிட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மரபணு மாதிரிகளை ஆய்வு செய்ய வேண்டிய சட்டத் தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடமிருந்து மரபணு மாதிரிகளைச் சேகரித்து பாதுகாக்கும் தேசிய காப்பகம் இதுவரை உருவாக்கப்படாத நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மரபணு மாதிரிகளை அவர்களின் முழுமையான ஒப்புதலுடன் சேகரித்து, அவற்றை பன்னாட்டு மேற்பார்வையுடன் பாதுகாக்கும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் ரவிகரன் கோரிக்கை விடுத்தார்.

மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் ஈடுபட்டுவரும் சட்டத்தரணி ரனித்தா ஞானராசாவும் இது குறித்து அண்மையில் வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிட்ட அவர், இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். (அ)

## அகில விராஜ்...

அழைக்கப்பட்டிருந்த அகில விராஜ் காரியவசம், விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

வழக்கை பரிசீலித்த நீதவான், சந்தேகநபரை 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அரசுக்குச் சொந்தமான சொத்துகளை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## இலங்கையின் முதல்...

தலைமையில் சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் நடைபெற்றது.

டச்சு கால கட்டட இடிபாடுகள், பல தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் பிரபலமான காட்டு குதிரைகள் ஆகியவற்றால் தனித்துவம் பெற்றுள்ள நெடுந்தீவு, அதிகளவிலான சுற்றுலா வாய்ப்புகளை கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

நெடுந்தீவை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் அனுபவிக்கக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என பிரதியமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்தார்.

பல சிறப்பம்சங்களை கொண்டிருந்த போதிலும், இதுவரை இலங்கையின் சுற்றுலாத்துறையில் நெடுந்தீவு வழங்கிய பங்களிப்பு குறைவாகவே உள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அதன் முழுமையான சுற்றுலா திறனை நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான முறையில் பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

நெடுந்தீவை முன்னணி சுற்றுலா தளமாக மாற்றுவதற்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், குடிதண்ணீர் வசதி, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் அணுகல் வசதிகள் முக்கியமாக ஆராயப்பட்டன.

அத்துடன், சுற்றுலா அபிவிருத்தியில் உள்ளூர் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டது. இதற்காக, உள்ளூர் மக்களின் அறிவு, விருந்தோம்பல் திறன்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான திறமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

## கடந்த ஐந்து...

பெருமளவானோர் சேவையிலிருந்து விலகியுள்ளதாக குறிப்பிட்டார்.

அதன்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 31,088 பேரும், கடற்படையைச் சேர்ந்த 2,501 பேரும், விமானப்படையைச் சேர்ந்த 1,394 பேரும் சேவையிலிருந்து விலகியுள்ளனர் என பிரதி அமைச் சர் தெரிவித்தார்.

முப்படைகளில் ஏற்பட்டுள்ள மனிதவள மாற்றங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்தத் தகவல்களை பாராளுமன்றத்தில் வெளியிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# அரசியல்வாதிகளை நம்பி ஏமாறாதீர்கள்!

## பொலிஸ் மா அதிபரிடம் நாமல் கோரிக்கை



கொழும்பு, ஓக. 06

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்ட பொலிஸ் மா அதிபர்களுக்கு ஏற்பட்ட நிலைமைகளை நினைவில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார். பொலிஸ்துறைக்கு அரசாங்கம் தேவையான வளங்களை வழங்கி வரும் நிலையில், அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து பொலிஸ் மா அதிபர் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பிலும் விமர்சனம் முன்வைத்த நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் நிவாரணங்கள் வழங்கப்படுவதாக அமைச்சர்கள் தெரிவித்தாலும், உரத் தட்டுப்பாடு மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இடம்பெற்ற சைபர் மோசடி சம்பவம் தொடர்பிலும் கருத்து தெரிவித்த அவர், அரச நிறுவனங்களை வலுப்படுத்துவது குறித்து பேசப்பட்டாலும், ஊடுருவல்காரர்கள் பணத்தை கொள்ளையடித்துச் செல்லும் நிலை காணப்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமைகளின் போது பாதுகாப்புப் படையினர், அரச அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் மேற்கொண்டு வரும் மீட்பு நடவடிக்கைகளை பாராட்டிய அவர், கடந்த கால அனர்த்தங்களின் பின்னர் அரசாங்கம் வழங்கிய பல வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தார்.

குறிப்பாக, டிட்வா சூறாவளிக்குப் பின்னர் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும், ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் அதே பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதால் தற்போதைய அனர்த்தங்களில் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அனர்த்தங்களால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு அரசாங்கம் உடனடி தீர்வு வழங்க வேண்டும் என்றும், விவசாயிகளின் உரப் பிரச்சினை மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை தொடர்பில் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நாமல் வலியுறுத்தினார். (அ)

# ஊழியர் சேமலாப நிதி சட்டத்தில் திருத்தம்!

கொழும்பு, ஓக. 06

தனியார் மற்றும் பகுதியளவு அரச துறைகளில் பணிபுரியும் ஓய்வூதிய உரிமையற்ற ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ள நிலையில், சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை குறைத்து, தரமான மற்றும் திறமையான சேவைகளை வழங்கும் வகையில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை இலங்கை மத்திய வங்கி முன்வைத்துள்ளதுடன், அதன் அடிப்படையில் தொழில் திணைக்களம் ஆரம்ப சட்ட வரைவைத் தயாரித்துள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்க சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குமாறு தொழில் அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# தேசிய மக்கள் சக்தி அரசுக்கே தமிழ் பேசும் மக்களும் ஆணை!

## கூறுகிறார் அமைச்சர் சந்திரசேகர்



கொழும்பு, ஓக. 06

தமிழ் பேசும் மக்களும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கே ஆணையளித்துள்ளதாகவும், அந்த மக்களின் ஆணையை மதித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் மக்களுக்கான நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்து காணி விடுவிப்பு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட வழமையான அரசியல் விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாக அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு தெளிவான ஆணையை வழங்கியுள்ளதாகவும், அந்த ஆணையை பாதுகாத்து மதிப்பளிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாகவும் அமைச்சர் கூறினார். அதற்கமையவே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளதாகவும், மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தேர்தல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். (அ)

# மஹர சிறைச்சாலை கலவரம்: சேதம் மதிப்பிட சிறப்புக் குழு!

கொழும்பு, ஓக. 5

மஹர சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையில் அண்மையில் ஏற்பட்ட மோதலின் போது சிறைச்சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோதலின் போது சிறைச்சாலையின் சமையலறை, பிரதான சிறைக் கண்காணிப்பாளரின் அலுவலகம், மறுவாழ்வுப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு கைதிகளால் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த தெரிவித்துள்ளார்.

நியமிக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவின் பிரதான பணியாக, ஏற்பட்ட சேதங்களின் அளவை மதிப்பிடுதல் மற்றும் பாதிக்கப்பட்ட வசதிகளை மீளமைப்பதற்கான அவசர பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மோதலுக்கான பின்னணி மற்றும் காரணங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தனியான விசாரணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மஹர சிறைச்சாலையின் உட்பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு நிலைமை முழுமையாக இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நீதிபதிகள் ஓய்வு வயதெல்லை அதிகரிப்பு நீதித்துறை மீதான நம்பிக்கைக்கு பாதிப்பு!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 06

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் யோசனை நடைமுறைப்படுத்தப்பட்டால், நீதித்துறை கட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கை பாதிக்கப்படுவதுடன், நாடு படிப்படியாக சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்லும் அபாயம் இருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒரு தனிநபரை இலக்காகக் கொண்டு அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என தெரிவித்த அவர், நீதித்துறையின் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் நடவடிக்கைகளை வேறு வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பது கவலைக்குரியது எனக் குறிப்பிட்டார்.

நீதிமன்றங்களின் சுதந்திரத்தை குறைப்பதற்கோ அல்லது பறிப்பதற்கோ எந்தவொரு அரசாங்கத்திற்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். அரசியலமைப்பில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டால், குறித்த யோசனை கட்டாயமாக பொதுஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் ரஜீவ் அமரசூரிய வலியுறுத்தினார்.

மேலும், நீதிபதிகளின் ஓய்வுவயதை உயர்த்தும் யோசனை பொருத்தமற்றது என முப்பீட மகாநாயக்க தேரர்களும், அங்லிகன் திருச்சபையும் கருத்து தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வழக்குகளை விரைவுபடுத்துவதே நோக்கம் என அரசாங்கம் தெரிவித்தாலும், இந்த அவசர திருத்தத்தின் பின்னணியில் வேறு உள்நோக்கம் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுவதாகவும், நீதிமன்ற முறைமை மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்தால் அதனை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் கடினம் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையில் டெங்கு கட்டுப்பாட்டுக்கு இந்தியா வழங்கிய மருந்து கையளிப்பு

கொழும்பு, ஓக. 06

இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக இந்தியா வழங்கிய 'மலத்தியன்' பூச்சிக்கொல்லி மருந்துத் தொகுதி நேற்று முன் தினம் சுகாதார அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, குறித்த மருந்துத் தொகுதியை சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளித்தார். பொது சுகாதார பரிசோதகர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த மருந்தை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு இந்திய தூதுவருக்கு சுகாதார அமைச்சர் நன்றி தெரி வித்தார்.

இலங்கையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப மலத்தியன் மருந்து பயன்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் டெங்கு பரவலின் வேகம் படிப்படியாகக் குறைந்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர தெரிவித்தார். இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள இந்த மருந்துத் தொகுதி, டெங்கு நோயை மேலும் கட்டுப்படுத்துவதற்கு உதவியாக அமையும் என அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2026 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உ[illegible]ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org